துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.2.2026) சென்னை சைதாப்பேட்டை வரசித்தி விநாயகர் தெருவில் 4.39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாய நலக் கூடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், மண்டலக்குழுத் தலைவர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, ஆர்.துரைராஜ், மாமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீதர், மோகன்குமார். துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகரில் ரூ. 4 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டுத் திடலை குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.மாலதி ஹெலன், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், நகரச் செயலாளர் ஜெ.சண்முகம், மாவட்ட துணை செயலாளர் து. மூர்த்தி, ஒன்றிய குழுத் தலைவர் உதயா கருணாகரன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் 6 சட்டமன்றத் தொகுதிகளில் BLA 2 – BDA – BLC மற்றும்

கழகத்தினர் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் ஈடுபடுவீர்!

மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், பிப்.26- காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் 6 சட்டமன்றத் தொகுதிகளில் BLA 2- BDA - BLC மற்றும் கழகத்தினர் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியல் சரி பார்க்கும் பணியில் மும்முரமாக ஈடுபடவேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இது குறித்து அவர் வெளிட்டுள்ள அறிக்கையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஆலந்தூர், திருப்பெரும்புதூர் - பல்லாவரம் - தாம்பரம் - செங்கல்பட்டு - திருப்போரூர் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

தேர்தல் ஆணையம் வெளியிட்ட வாக்காளர் பட்டியலை ஒன்றிய- நகர- பகுதி- பேரூர் வாரியாக பிரித்து தந்துள்ளோம். வாக்காளர் பட்டியலை பெற்றுக் கொண்ட ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழகச் செயலாளர்கள் உடனடியாக பாகம் வாரியாக பிரித்து வார்டு - கிளைச் செயலாளர்கள் மூலம் அந்தந்த பாக BLA -2 வசம் உடனே ஒப்படைத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அப்படி பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்களிடம் இருந்து BLA -2 பெற்ற வாக்காளர் பட்டியலை பாகம் வாரியாக, அந்த பாகத்தில் அடங்கியுள்ள வார்டு - கிளைக் கழகச் செயலாளர்கள், வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், BDA - BLC மற்றும் கழகத்தினர் - இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி நிர்வாகிகள் - வாக்குச்சாவடி நிலை முகவர்கள் உதவியோடு வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியலை ஆய்வு செய்திட வேண்டும்.

சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல் என்பதால் ஒவ்வொரு பூத்திலும் உள்ள திருத்தம் செய்யும் பணி மிகவும் முக்கியமானது என்பதை கவனத்தில் கொண்டு, அந்த பூத்தின் BLA 2- BDA - BLC மற்றும் கழகத்தினர் அனைவரும் இணைந்து இப்பணியை மேற்கொள்ள வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளர் பட்டியல் சரி பார்க்கும் இச்சிறப்பு பணியில் மாநகர-பகுதி-ஒன்றிய-நகர-பேரூர் செயலாளர்கள் பாகம் வாரியாக சென்று கழகத்தினர் வாக்குச்சாவடி நிலை முகவர்களுடன் இணைந்து இப்பணியை சிறப்பாக செய்கிறார்களா என்பதை கண்காணிப்பு செய்யும் பணியில் ஈடுபட வேண்டும் மேலும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், 10 பூத் ஒருங்கிணைப்பாளர்களும், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பூத்களில், வாக்காளர் பட்டியல் சரி பார்க்கும் பணியை அந்தந்த பாகம் வாரியாக சென்று கண்காணிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

SIR பணிகளுக்கு பிறகு வெளியிடப்பட்ட புதிய வாக்காளர் பட்டியலில் எந்த பூத்திலாவது அதிகமான அளவில் வெளிமாநில வாக்களர்களை சேர்த்திருந்தலோ அல்லது Bulk ஆக வாக்காளர்களை சேர்த்திருந்தாலோ அது பற்றிய விவரங்களை உடனடியாக மாவட்டக் கழகத்திற்கு தகவல் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

முதலமைச்சர் – கழகத் தலைவர் பிறந்தநாள்! மாநிலம் முழுவதும்

ஏழையெளியோர்க்கு நலத் திட்ட உதவிகள் வழங்கி எழுச்சியுடன் கொண்டாடிடுவீர்!

தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ் வேண்டுகோள்!

சென்னை, பிப்.26- கழக தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

எல்லோருக்கும் எல்லாம் எனும் தாரக மந்திரத்துடன் 'திராவிட மாடல்' ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளான மார்ச் - 1 அன்று, தி.மு.க. தொழிலாளர் அணியின் சார்பில் மாநிலம் முழுவதும் மாநில நிர்வாகிகள் மற்றும் ஒவ்வொரு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மாநிலத்தில் அனைத்துப் பகுதிகளிலும் எழுச்சியுடன் கொண்டாடிட வேண்டுமெனவும்;

இப்பிறந்த நாள் விழா வினை, தொழிலாளர் அணிச் சார்பில் நலிந்த தொழிலாளர்களுக்கும் - ஏழையெளியோர்க்கும் நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் வண்ணம் தத்தமது பகுதிகளில் உள்ள முதியோர் இல்லங்கள், அனாதை இல்லங்களில் ஏழையெளியவர்களுக்கு உணவு வழங்கியும் - அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் வழங்கியும் "எளியோர் எழுச்சி நாளாக" சிறப்பாக கொண்டாடிட வேண்டுமென தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகி களையும் - அனைத்து மாவட்டத்திலுள்ள தொழிலாளர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களையும் - தொழிலாளத் தோழர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

மார்ச்–1 கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. நிகழ்ச்சி ஏற்பாட்டில், ஆர்.கே.நகர் தொகுதி வார்டு43 ஆதிதிராவிடர் தெருவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமி ஆகியோர் வழங்கினார்.இந்நிகழ்வில் பகுதி கழக செயலாளர்கள் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், மண்டலக்குழு தலைவர் நேதாஜி. யு.கணேசன், மாவட்ட அவைத்தலைவர் ஆர்.வெற்றிவீரன், மாநில வழக்கறிஞர் அணி துணை செயலாளர் என்.மருது கணேஷ் ,வட்ட கழக செயலாளர் பொ.து.ராஜா, மாமன்ற உறுப்பினர் என்.பவித்ரா, மாநில,மாவட்ட,பகுதி,வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்வேறு வார்டுகளில்

16 தெருக்களில் ரூ. 2.25 கோடி மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்கும் பணி!

அமைச்சர் பி.கே. சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, பிப்.26- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டு தலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவருமான பி.கே.சேகர்பாபு, இராயபுரம் மற்றும் திரு.வி.க. நகர் மண்டலங்களில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை நேற்று (25.02.2026) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, இராயபுரம் மண்டலத்தில் புதியத் திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டு தலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் மாநகராட்சி மூலமாகவும், சி.எம்.டி.ஏ. மூலமாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக வடசென்னைப் பகுதி மக்களுக்கு வாழ்வாதாரத்தை முன்னேற்றம் வகையில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், பல்வேறு சிறப்புத் திட்டப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறாக இன்று துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, இராயபுரம் மண்டலத்தில் 54, 55, 56, 57, 59 மற்றும் 60ஆவது வார்டுகளில் 16 தெருக்களில் உள்ள சாலைகள் தரம் உயர்த்திடும் வகையில், ரூபாய் 2.75 கோடி மதிப்பீட்டில் புதியதார் சாலை அமைத்திடும் பணியினை இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், இராயபுரம் மண்டலம், என்.எஸ்.சி. போஸ் சாலையில் தொடங்கி வைத்து, பணிகள் அனைத்தும் திட்ட காலத்திற்குள் தரமாக மேற்கொண்டு முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரருக்கு அறிவுறுத்தினார். இந்தப் பணியினால் இப்பகுதியில் வசிக்கும் பொது மக்கள் சாலை வசதிப் பெற்று மிகவும் பயன் பெறுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், திரு.வி.க. நகர் மண்டலம், புளியந்தோப்பு, டாக்டர் அம்பேத்கர் சாலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சி.எம்.டி.ஏ. சார்பில் ரூபாய் 52 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் ஆடுதொட்டி புச்சர் கிரவுண்டு மற்றும் வார்டு 73, புளியந்தோப்பு திருவேங்கடம் சாமி தெருவில் ரூபாய் 4.29 கோடி மதிப்பீட்டில் 3 தளங்களுடன் கட்டப்பட்டு வரும் சென்னை ஆரம்பப் பள்ளியின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, இராயபுரம் மண்டலம், வார்டு57, ரமணன் தெரு சந்திப்பு, வ.உ.சி சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் போக்குவரத்து தீவு (இந்திரா காந்தி சிலை) மேம்படுத்தும் பணிகளைத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மண்டலக்குழுத் தலைவர் பி.ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் வெ.பரிமளம், சிவராஜ சேகரன், அம்பேத்வளவன், மு.சரவணன் மண்டல அலுவலர் விஜய்பாபு, செயற் பொறியாளர் சிவப்பிரகாசம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி குரோம்பேட்டை அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் அனகாபுத்தூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியிலும் பயிலும் மாணவ மாணவிகள் சுகாதாரமான குடிநீர் பருகிட. பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி எம். எல். ஏ. தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தலா ரூபாய் 9.00 லட்சம் என மொத்தம் 18 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2000 LPH சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைத்துத் தந்து மாணவ மாணவிகளின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். அப்பொழுது மண்டல தலைவர்கள் இ. ஜோசப் அண்ணாதுரை வே. கருணாநிதி பகுதி கழக செயலாளர்கள் த. ஜெயக்குமார் இ. எஸ். பெர்னார்ட், மாமன்ற உறுப்பினர்கள் இரா. நரேஷ் கண்ணா வாணிஸ்ரீ விஜயகுமார், கலைவாணி பிரபு, ஆகியோர் உடன் இருந்தனர்.